# தெரிவு செய்யப்பட்ட பொதுச் செயற்பாடுகளின்போதும்/ பொது இடங்களிலும் கோவிட்-19 கட்டுப்பாடு மற்றும் முற்தடுப்பினை மேற்கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் (தமிழ்)

வேறுபட்ட பொதுக் கருமங்கள் மற்றும் வேலைத் தளங்களுக்கான அறிவுறுத்தல் குறிப்புகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றுள் சுற்றுலாத்துறை, பேரங்காடிகள், நிகழ்ச்சிகள் முகாமைத்துவம் போன்றவற்றிற்கு பல அறிவுறுத்தல்கள் அவசியப்படும்.

இவ்வறிவுறுத்தல்கள் அனைத்தும் சுகாதார அமைச்சின் அனுமதியை பெற்ற பின்னரே மீண்டும் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும். (முழுமையாக/தெரிவு செய்யப்பட்ட)

ஒவ்வொரு அறிவுறுத்தல்களும் சுகாதார அமைச்சின், சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்படும். மற்றும் இவை அனைத்து ஸ்தாபனங்கள்/உரிமையாளர்கள்/பொறுப்பதிகாரிகளினால் COVID 19 பரவலை தடுப்பதற்காக பின்பற்றப்படல் வேண்டும்.

தொழில்சார் வேலைத்தளங்கள் சம்பந்தமான மேலதிக தகவல்களுக்கு பின்வரும் இணையதளத்தை அணுகவும்.

http://eohfs.health.gov.lk/occupational/index.php?option=com_content&view=article&id=61&Itemid=208&lang=en

නව ජීවන රටාවක් උදෙසා
புதிய வாழ்க்கை முறையை நோக்கி
TOWARDS A NEW NORMAL

MINISTRY OF HEALTH AND INDIGENOUS MEDICAL SERVICES

World Health Organization Sri Lanka

GOVERNMENT MEDICAL OFFICERS ASSOCIATION

SRI JAYAWARDENEPURA KOTTE MUNICIPAL COUNCIL

## *1. வாடகை மகிழூர்ந்து சேவைகளைப் பயன்படுத்துதல்*

*கோவிட் 19 ற்கு எதிர்வினையாற்றும் தற்போதைய சூழ்நிலை காரணமாக ஆட்களுக்கு இடையிலான உடல் இடைவெளியினைப் பேணுதற்கு ஏதுவாக வாடகை மகிழூர்ந்துகளில் பயணிக்கும் பிரயாணிகளது எண்ணிக்கையானது மட்டுப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் பிற பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகளும் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.*

*பிரத்தியேக தகவல்கள்/வழிகாட்டல்கள்*
*வாடகை மகிழூர்ந்து சாரதிகளுக்கு*

- *ஒரே குடும்பத்தினர் அல்லாத சந்தர்ப்பங்களில் அதிகபட்ச பயணிகள் இருவர் மட்டுமே என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.*
- *பயணிகள் முன் இருக்கையில் பயணிக்கக்கூடாது.*
- *சாரதி ஆசனத்திற்கும் பயணிகள் ஆசனங்களுக்கும் இடையில் ஊடுகாட்டும் தடுப்பு (transparent barrier) ஒன்றினை அமைக்க வேண்டும்.*
- *பணத்தைக் கையாளுவதைக் குறைத்து பயணிகள் உரிய வாடகைக் கட்டணத்தொகையினை செலுத்துவதை ஊக்குவியுங்கள் (அதாவது அவர்கள் கூடிய தொகையினை வழங்கி மிகுதிப் பணத்தை உங்களிடமிருந்து பெறுவதை ஊக்குவிக்க வேண்டாம்) அல்லது கட்டணம் செலுத்தும் செயலிகள் ஊடாக நிகழ்நிலை பணப்பரிமாற்றத்திற்கான (online payments via payment apps) ஏற்பாடுகளை மேற்கொள்ளுங்கள்.*
- *எப்போதும் கை தூய்மிப்பான்/மதுசார கைதேய்ப்பான் ஒன்றினை உங்கள் வசம் வைத்திருங்கள்.*
- *இயலுமாயின் பயணிகளுக்காக கை தூய்மிப்பான்/மதுசார கைதேய்ப்பான் ஒன்றினை வையுங்கள்.*
- *பயணிகளை ஏற்றும் போதும் இறக்கும் போதும் அவர்களது சொந்தப் பைகள் மற்றும் உடமைகளை அவர்களே கையாளுமாறு கேட்பதைக் கருத்திற் கொள்ளுங்கள்.*
- *பயணிகளை கொண்டு செல்லும்போது மகிழூர்ந்தின் காற்றோட்டத்திற்காக 'மீள்சுற்றோட்ட வளி' யைப் பயன்படுத்தும் தெரிவினை மேற்கொள்ளாது தவிர்க்கவும் (Avoid using the recirculated air option). மகிழூர்ந்தில் உள்ள காற்றோட்ட சிறுதுளைகளை திறப்பதன் மூலம் மற்றும்/அல்லது வாகன சாளரங்களைத் திறப்பதன் மூலம் தூய வளி வெளியிலிருந்து உள்வரச் செய்யுங்கள்.*
- *வாகனத்தில் அடிக்கடி தொடுகைக்கு உள்ளாகும் மேற்பரப்புகளை சுத்தப்படுத்தி தொற்றுநீக்கம் செய்யுங்கள்.*
- *சகல பயணிகளும் முகக் கவசம் அணிவதனை உறுதிப்படுத்தவும்.*
- *மகிழூர்ந்தில் (Taxi) நுழைவதற்கு முன்பு, அனைத்து பயணிகளும் கை தூய்மிப்பானைப் பயன்படுத்தி தங்கள் கையை சுத்தப்படுத்த வேண்டும்.*
- *வழங்கப்பட்ட உத்தரவாத படிவத்தை நீங்கள் நிரப்ப வேண்டும்: இது கொடுக்கப்பட்ட வழிமுறைகளுக்கு இணங்குவதைக் குறிக்கிறது. உத்தரவாத படிவத்தின் அசல் சுகாதார மருத்துவ உத்தியோகஸ்தரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதன் நகலை அரச உள்ளூர் அதிகார சபைக்கு (நகராட்சி மன்றம் / நகர சபை / பிரதேசிய சபை ) அனுப்ப வேண்டும் மற்றும் மற்றைய நகலை நீங்கள் வைத்திருக்க வேண்டும். மேலே உள்ள வழிகாட்டுதல்கள் கண்டிப்பாக கடைபிடிக்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவது உரிமையாளரின் / சாரதியின் பொறுப்பு ஆகும்.*

பயணிகளுக்கு

- *முகக்கவசம் ஒன்றினைச் சரியாக அணிந்து கொள்ள வேண்டும்.*
- *முன் இருக்கையில் அமர வேண்டாம்.*
- *வாடகை மகிழூர்ந்தில் பயணிக்கும் போது அலைபேசியினைத் தொடாமல் இருக்க முயற்சிக்கவும்.*
- *அடிக்கடி தொடுகைக்கு உள்ளாகும் மேற்பரப்புகளை அனாவசியமாகத் தொட வேண்டாம் உதாரணம்: கை தாங்கிகள் (armrests) , கதவுகள் போன்றவை.*

- வாடகை மகிழூர்ந்தில் பயணம் செய்த பின்னர் சவர்க்காரம் மற்றும் நீர் கொண்டு உங்களது கைகளை ஆகக் குறைந்தது 20 வினாடிகளுக்குக் கழுவுங்கள்.
- பணத்தைக் கையாளாமல் முடிந்தவரை நிகழ்நிலை முறைகள் *(Online Methods)* மூலம் பணம் செலுத்துங்கள்.

அறிவுறுத்தும் முறைகள்

- பொதுசனத்தொடர்பு ஊடகங்களைப் பயன்படுத்தி அறிவுறுத்தல்.
- அலைபேசிச் செயலிகள் ஊடாக வழிகாட்டுதல்களைக் கிடைக்கச் செய்தல்.
- மகிழூர்ந்துக்குள் *(Taxi)* வழிமுறைகள் / சைகை விளக்கங்கள் காட்டப்பட வேண்டும்



சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்

Dr. Anil Jasinghe
Director General of Health Services
Ministry of Health & Indigenous Medicine Services
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10.

28.06.2020